<u>முதன்மை  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,பொள்ளாச்சி</u>

நாள்: 10.09.2025   அ.வ.எண்.218/2020. வா.சா.1. சாந்தி, க/பெ. ராமசாமி

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு  பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) எதற்காக இந்த வழக்கு தாக்கல்  செய்துள்ளேன் என்றால் எனது கணவர் ராமசாமிக்கு வாரிசு சான்றிதழ் வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். ராமசாமிக்கு என்னைத்தவிர 3 ம் வாதி உமாவும் ஒரு மனைவி என்றால் சரிதான். ராமசாமியின் வாரிசு சான்றிதழ் கோரி ஆனைமலை வட்டாட்சியரிடன் கொடுத்த மனுவில் ராமசாமியின் வாரிசுகள் யார் என்று சரியாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. இறந்த ராமசாமிக்கு 2 மனைவிகள் என்பதாலும் ராமசாமியின் வாரிசுகள் யார் என்று சரியாக குறிப்பிடவில்லை என்பதாலும் நாங்கள் தாக்கல் செய்த மனு 1 ம் பிரதிவாதியால் நிராகரிகரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/- (R.சுஜாதா)

முதன்மை  மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி.